# தமிழ்ச் சிட்டு

## தன்னலம் கருதாத தம்பி, நீ!

எங்குமே எதிலுமே எவருமே இழிஞராய்
இருக்கின்றார் எனில், உளம் சோரார்தே!—எதும்
தங்கமாய் இருந்திடில் தனிமதிப் பதற்குண்டோ?
தனியன், நீ! பிறர் நிலை பாராதே!

உண்பதில் உடுப்பதில் உடலின்பம் துய்ப்பதில்
உலகினர் யாவரும் ஒன்றுதான்!—உன்
கண்பொது, வாய்பொது, செவிபொது—என நலம்
கருதினால் உனக்கது நன்றுதான்!

உன்நலன் பொதுநலன்; உன்நடை புதுநடை;
உன்பயன் யாவர்க்கும்—என்றுசொல்—ஒரு
தன்னலம் கருதாத தம்பி, நீ என்பதே
தகுதிசேர் உரையென நின்று சொல்!

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

குரல் : 21
இசை : 12

விலை :
உருபா: 1-5

# தெரிந்து கொள்ளுங்கள்

- இந்திய மாநிலங்களிலேயே பரப்பளவில் மத்திய பிரதேசமே பெரியது.
- உலகிலேயே பெரிய தொடர்வண்டி நிலையம் அமெரிக்காவில் நியூயார்க் நகரில் உள்ள 'கிராண்ட் சென்ட்ரல் டெர்மினல்' தொடர்வண்டி நிலையந்தான்! இங்கு மொத்தம் 47 நிலை மேடைகள் (Plat—forms) உள்ளன. இரவு, பகல் எப்பொழுதும் தொடர்வண்டிகள் வந்து கொண்டும் போய்க் கொண்டுமே உள்ளன; மக்கள் கூட்டம் எப்பொழுதும் அலைமோதிக் கொண்டே இருக்கும்.
- தமிழகத்தில் நடுவண், கிளை நூலகங்களாக மொத்தம் 1600 நூலகங்கள் உள்ளன.
- தமிழ் மொழியில் உயிரினங்களின் இளமைப் பருவத்தைக் குறிக்க பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மக, மறி, குழவி, போத்து என்னும் பத்துச் சொற்கள் உள்ளன என்று தொல்காப்பியம் கூறுகிறது.
- மறைந்த தலைமையமைச்சர் இராசீவ் சுவிட்சர்லாந்து வைப்பகத்தில் உரு 4625 கோடி பணம் போட்டு வைத்திருந்ததாக ஒரு செய்தி அண்மையில் பேசப் பெற்றது.
- மட்டைப் பந்து (கிரிக்கெட்) விளையாடும் மட்டைகள் (Bats) வில்லோ என்னும் முடிச்சுகள் அற்ற ஒருவகை மரத்தில்தான் செய்யப்படுகிறது. இம்மரம் இலண்டனில்தான் இருக்கிறது.
- தமிழகம் முழுவதிலும் 5032 பங்கீட்டுக்(ரேஷன்)கடைகள் உள்ளன.
- உலக ஒன்றியத்தில் (ஐ.நா.வில்) ஒரு பகுதியாக இயங்குகிற, "உலக நாகரிகப் பாதுகாப்புக் கழகம்" என்னும் கட்டமைப்பில் 115 நாடுகள் உறுப்பாண்மை பெறுகின்றன.
- மாற்றுச் சிறு நீரகத்தைப் பொருத்திக் கொண்ட ஒருவர் வேறு சிக்கல்கள் இல்லாமலிருந்தால் இருபது ஆண்டுகள் உயிர் வாழலாம்.
- பெற்றோர் ஒருவர்க்கு 50 அகவையில் சர்க்கரை நோய் வந்திருந்தால், அவரின் வழிமுறையினர்க்கு 30 அகவையிலேயே சர்க்கரை நோய் வரலாம்.
- செவ்வாய்க்கோளில் கடுமையான குளிரினாலும், வெள்ளிக் கோளில் கடுமையான வெப்பத்தினாலும் அவ் விரண்டிலும் உயிரினங்கள் வாழவியலாது என்று அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.
- சென்ற ஆண்டு வளைகுடாவில் நடந்ததும், மூன்றாம் உலகப் போர் என்று கருதப்பட்டதும்,மொத்தம் 43 நாள்கள் நடந்ததுமான ஈராக் போரில்,70 ஆயிரம் ஈராக் படை வீரர்களும், பொது மக்களில் 70 ஆயிரம் பேர்களும், அப்போர்த்தொடர்பாக நடந்த உள் நாட்டுப் போரில் 30 ஆயிரம் பேர்களும், ஆக மொத்தம் 1,70,000 பேர்களும் உயிரிழந்தனராம்.
- மது மோகன் என்பவர் ம.கோ.இராமச்சந்திரன் பற்றிய ஒரு ஒரு தொலைக்காட்சித் தொடரை 13 கிழமைகளுக்கு வருமாறு இந்தியில் அணியப் படுத்தி உள்ளார். இதில் ம.கோ.இரா.வாக நடிப்பவர், மலேசியா எம்.ஜி.ஆர். என்று

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்- 21] (தி.பி. 2023) இரட்டை (சூலை 92) [இசை-12


## வரலாறு மறைக்கப்படுகிறது! தமிழ் இளைஞர்கள் விழிப்பாக இருக்க வேண்டும்!-3

வட இந்தியாவில் கால்வைத்து வளர்ந்து, தமிழர்களை அஃதாவது வட தமிழர்களாகிய திராவிடரை ஏமாற்றி, வஞ்சகமாகக் கொன்று அழித்துத் தங்கள் ஆட்சி வலிமையை மேம்படுத்திக் கொண்டனர் ஆரியர்.

தமிழர்களை அவர்கள் ஏமாற்றிய வகை மிகவும் கரவு வாய்ந்தது. அவற்றுள் சில, அரசர்களை அண்டி, அவர்களிடம் தங்கள் பெண்டு பிள்ளைகளை விட்டுக் கொடுத்தும், தங்களின் வேதங்களையும் அவற்றில் உள்ள மந்திரங்களைக் கூறி புரோகிதர்களாகவும் அரச குருக்களாகவும் அமர்ந்தும், அரசியல் பொருளியல், இனவியல், கலையியல், பண்பாட்டியல், சமயவியல் முதலிய அனைத்து நிலைகளிலும் தலையிட்டுத் தங்களை வளர்த்தும் வலிவு படுத்திக் கொண்டனர். தங்களை எதிர்த்த தமிழர்களையும் தமிழறிஞர்களையும் இணக்கப்படுத்திக் கொண்டும், சாதிகளைப் பகுத்து அவர்களை வேறுபடுத்தி ஒற்றுமையிழக்கச் செய்தும், அவர்களில் சிலரைத் தங்களுக்குச் சார்பாக ஆக்கிக் கொண்டும் வலுப்பெற்று வரலாயினர்.

அவர்கள் கையாண்ட அந்த அரச தந்திரங்கள் சாமம், பேதம், தானம், தண்டம் என்னும் உத்திகள் கொண்டன. சாமம் என்பது சமம் என்னும் தமிழ் வேரடியாகப் பிறந்த இணக்கம் என்று பொருள்படும் சொல். அஃதாவது நட்பாடுவது. இவர்கள் தமிழர்களிடம் அன்பொழுகவும், நயமாகவும் பேசி, அவர்களைத் தங்களுக்குச் சார்பான நட்பாளர்களாக ஆக்கிக் கொள்ளும் தந்திர உத்தியே சாமம்.

பேதம் என்பது வலிவாக இருக்கும் எதிரிகளைப் பிரித்து வைப்பது. அஃதாவது அவர்கள் ஒருவரை ஒருவர் வெறுத்து அல்லது பகைத்துப் பிரிந்து விடுகின்ற தந்திரங்களைக் கையாள்வது. இது நட்பாடிக் கெடுப்பதை விட மிகக் கொடுமையானது. மிகவும் தந்திரமானது. ஒருவரை விரும்புவது போல மற்றவரைப் பற்றிக் குறை சொல்லி, கோள் சொல்லிப் பிரிக்கும் அறிவுத் திறம் வாய்ந்தது. இவ்வகையில் தமிழ் அரசர்கள் ஒன்றுபட்டு இயங்காதவாறும், பகை கொள்ளுமாறும் செய்து, அவர்களைப் பிரித்து ஒற்றுமையிழக்கப் பண்ணி, பின்னர் அவர்கள் இருவரையும் ஒவ்வொருவராய் அழித்து விடுவது, நான்கு மாடுகளும் ஓர் அரிமாவும் (சிங்கமும்) என்னும் கதையில் எப்படி நான்கு மாடுகளும் ஒன்றாக இருக்கையில் அரிமா அவற்றைத் தின்ன முடியாமல் இருந்து, பின்னர் அவற்றுக்குள் சண்டை மூளச் செய்து, அவை தனித் தனியாகப் பிரிந்து மேய்ந்தபின், அவற்றை ஒவ்வொன்றாகத் தின்று நான்கையும் அழித்ததே அந்தத் தந்திர உத்தியே பேதம் ஆகும். பேதப்படுத்தி அழிப்பது அது.

அடுத்த மூன்றாவது உத்தி தானம் என்பதாகும். தானம் என்பது அன்பளிப்பாக எதையேனும்—பொன், பொருள், பதவி, உணவு, உடை, பெண், நிலம், வீடு, சொத்து முதலியவற்றுள், ஆளுக்குத் தக்கபடி, இடத்துக்குத் தக்கபடி ஏதாவது ஒன்றையோ பலவற்றையோ எதிரிக்கு அன்பளிப்பாகக் கொடுத்து, அவரை வயப்படுத்தித் தங்களுக்கு உகந்தபடி சார்பாக ஆக்கிக் கொண்டு, தங்களுக்கு வலிவை ஏற்படுத்திக் கொள்வது. தங்களுக்கு வலிவு ஏற்பட்டவுடன், அவ்வெதிரியை மறைமுகமாக அழிப்பது அல்லது செயலிழக்கச் செய்வது அடுத்த முயற்சியாக இருக்கும்.

இனி, நான்காவதாகக் கையாள வேண்டிய தந்திர உத்தி தண்டம் ஆகும். அஃதாவது 'சாமம்' என்னும் நட்பு முயற்சி கைகூடவில்லை என்னும் பொழுது, பிரித்தாளும் சூழ்ச்சியாகிய பேதத்தைக் கையாளுவார்கள்; அதுவும் வெற்றி தரவில்லையெனில், தானம் என்னும் அன்பளிப்பு முயற்சியால் எதிரியைத் தன்வயப்படுத்துவார்கள்; இல்லெனில் அழிப்பார்கள், அல்லது செயலிழக்கச் செய்வார்கள். இந்த முயற்சியும் வெற்றி பெறவில்லையானால் எதிரியை எவ்வாறேனும் தண்டித்து அழித்து விடுவார்கள். தண்டிப்பது என்பது தானே தண்டனை கொடுப்பது என்பதாக மட்டும் அல்லாமல், வேறு யாராகிலும் தனக்குகந்த அரசனையோ அல்லது அதிகாரிகளையோ கொண்டு தண்டிக்கச் செய்வதாகும்.

இவ்வாறு நான்கு வகையான ஆளுமை உத்திகளைத் தந்திரங்களைக் கொண்டுதான் ஆரியர்கள் வடதமிழ திராவிட அரசர்களையும், அவர்களின் கீழுள்ள வீர மறவர்களையும் போர்த் தளபதிகளையும் அழித்துத் தங்கள் ஆளுமையை அதிகப்படுத்திக் கொண்டார்கள்.

இந்தியாவில் ஆரியர்களின் ஆளுமை கையோங்கிய பின்னர், தமிழ அரசர்களின் நிலை படிப்படியாய்த் தாழத் தொடங்கியது; இந்த நிலையும் ஆரியர்கள் தென்னாட்டை நோக்கிப் பரவலாகுகின்ற நிலையும் படிப்படியாக ஒரே கால அளவில் நடைபெற்று வந்தன.

தமிழகத்திற்குள் ஆரியர்கள் வந்து நிலைபெறத் தொடங்கிய காலம் ஏறத்தாழ கி.மு. 2000-1500 போல் என்று குறிப்பிடப்பெறுகின்றது. அவர்கள் இங்கு வந்த பின் பல்வேறு அரசியல், ஆட்சியியல், இனவியல், மொழியியல், கலையியல், பண்பாட்டியல் மாறுதல்களைச் செய்கின்றனர். அதற்குள் அவர்களின் ரிக்வேதம், யஜுர், சாமம், அதர்வணம் என்று நான்கு வேதங்களாக விரித்து எழுதப் பெறுகின்றன. அவற்றின் கொள்கை, கோட்பாடுகளையொட்டி இராமாயணம், மகாபாரதம் என்னும் இதிகாசங்கள் படைக்கப்பெற்று மூலை முடுக்குகள் எல்லாம் பரப்பப் பெறுகின்றன. அவர்களின் வேதங்களில் சொல்லப்பெறும் கடவுள்களான இந்திரன், வருணன், அக்நி முதலிய தேவர்களுக்கும், ருத்ரன், விஷ்ணு, பிரம்மன் முதலிய தெய்வங்களுக்கும் பல்வேறு புராணங்கள் எழுதப் பெறுகின்றன. அவை மீண்டும் ஆயிரக் கணக்கில் விரிவுபடுத்தப் பெறுகின்றன. மக்களிடையே அவை மிகுந்த சாய்கால் பெறுகின்றன; அக்கதைகளைக் கொண்டு மக்கள் மூடநம்பிக்கைகளிலும், அறியாமைகளிலும் வீழ்த்தப் படுகின்றனர். மக்களிடம் வர்ண வொழுக்கங்கள் பிராமண-சத்திரிய, வைசிய, சூத்ர என்னும் பாகுபாடுகளும், அவற்றையொட்டி ஆயிரக்கணக்கான சாதிகளும் அவற்றுக்கிடையே உயர்வு தாழ்வுகளும் இழிவு சிறப்புகளும் கற்பிக்கப்படுகின்றன; அவர்களின் நடைமுறைகளுக்கேற்ப வர்ணச்ரம தர்மங்கள் வரையறுக்கப் பெற்று ஸ்மிருதி என்னும் மனுதர்மம் போன்ற நூல்கள் எழுதி நடைமுறைப் படுத்தப்படுகின்றன. அரசர்கள் அவற்றையொட்டியே தங்கள் ஆட்சிகளை நடத்த வற்புறுத்தப் பெறுகின்றனர். தென்னாடு வந்த ஆரியர்களுக்கு வேதியர், அந்தணர், பிராமணர், புரோகிதர், பார்ப்பனர் என்னும் பெயர்கள் வழங்குகின்றன. அவர்கள் யாகங்கள் செய்து வேதங்கள் ஓதுபவர்களாகவும், அரசர்களுக்குக் குருமார்களாகவும், அறிவாளர்களாகவும், ஆசிரியர்களாகவும், வேதமதத்தை வளர்த்து மக்களிடைப் பரப்பும் மதவாச்சாரியார்களாகவும், பிரம்மத்தை யுணர்ந்த மாதவர்களாகவும், தவ முனிவர்களாகவும், நிறைய கோயில்களை கட்டுவித்துக் கோயில்களில் வழிபாடு செய்பவர்களாகவும், மக்களிடையில் சாதி, மதச் சடங்குகளைச் செய்பவர்களாகவும் மதிக்கப் பெறுகின்றனர்;

(தொடரும்)

# உலக நாடுகளைத் தெரிந்து கொள்ளுங்கள்!

## 10. ஆப்கானிஸ்தான் (AFGHANISTAN)—குடியரசு.

நிலப்பரப்பு : 6,47,497, ச.அ.மா.
மக். தொ : 17,500,00 (இதில் 23% மக்கள் நாட்டுக்கு வெளியே ஏதிலிகளாக உள்ளனர்.)
மக். தொ. பெ : 2.5%
மக், வா. எ : ஆண் : 40 பெண் : 41 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 10%
தலைநகர் : காபூல்
மொழி : புஷ்டு, தாரி (பெர்சியன்)
நாணயம் : ஆப்கானி — 100 புட்டுகள்.

## 11. சைனா (CHINA) — குடியரசு

நிலப்பரப்பு : 95,61,000 ச.அ.மா.
மக். தொ : 100,81,75,000
மக். தொ. பெ : 1.4%
மக். வா. எ : ஆண் : 62 பெண் : 69 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 75%
தலைநகர் : பெய்ஜிங் (பீகிங்)
மொழி : மாண்டரின் சைனீஸ், ஷாங்காய், கேண்டன், புக்கியின், ஹக்கா திசைமொழிகள், திபெத்தன், விகூஸ் (டர்க்கி)
நாணயம் : யுவான் - 10 ஜியர்ப் - 100 பெஃன்

## 12. நிப்பான் (NIPPON) ஜப்பான் (JAPAN) — முடியரசு

நிலப்பரப்பு : 3,77,765 ச.அ.மா.
மக். தொ : 11,95,00,000
மக். தொ. பெ : 0.9%
மக். வா. எ : ஆண் : 73 பெண் : 78 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 99%
தலைநகர் : டோக்யோ
மொழி : சப்பானீசு.
நாணயம் : யென் - 100 செனு

## 13. இசரேல் (ISRAEL) — முடியரசு

நிலப்பரப்பு : 20,770 ச.அ.மா.
மக். தொ : 41,50,000
மக். தொ. பெ : 2.6%
மக். வா. எ : ஆண் : 71 பெண் : 73 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 88%

தலைநகர் : எருசெலேயிம் (ஜெருசெலம்)
மொழி : ஹீப்ரு, அரபிக்,
நாணயம் : ஷேகல் — 100 அகோரோட்

**14.** ஜோர்டான் (**JORDAN**) — குடியரசு

நிலப்பரப்பு : 97,740 ச.அ.மா.
மக். தொ : 35,00,000
மக். தொ. பெ: 3.7%
மக். வா. எ : ஆண் : 58 பெண் : 62 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 58%
தலைநகர் : அம்மேன்
மொழி : அரபிக்
நாணயம் : ஜோர்டான் டினார் = 1000 பில்ஸ்

**15** குவைத் (**KUWAIT**) — குடியரசு

நிலப்பரப்பு : 17,818 ச.அ.மா.
மக். தொ : 19,10,000
மக். தொ. பெ : 6.0%
மக். வா. எ : ஆண் : 67 பெண் : 72 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 71%
தலைநகர் : அல்குவைத்
மொழி : அரபிக்
நாணயம் : குவைத் டினார் = 1000 பில்ஸ்

**16.** பாக்கிஸ்தான் (**PAKISTAN**) — குடியரசு

நிலப்பரப்பு : 8,87 747 ச.அ.மா.
மக். தொ : 8,9 0,00, 000
மக். தொ. பெ : 2.8%
மக். வா. எ : ஆண் : 52, பெண் : 50 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 23%
தலைநகர் : இசுலாமாபாத்
மொழி : உருது, பஞ்சாபி.
நாணயம் : பாக்கிசுத்தான் ருப்பீ = 100 பைசா

**17.** சவூதி அரேபியா (**SAUDI** ARABIA) முடியரசு

நிலப்பரப்பு [: 21,49, 690 ச.அ.மா.
மக். தொ : 84,00,000
மக். தொ. பெ : 4.2%
மக். வா. எ : ஆண் : 52 பெண் : 55 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 15%
தலைநகர் : ஏர் ரியாத்
மொழி : அரபிக்
நாணயம் : ரியால் — 100 ஹலாலஸ்

(தொடரும்)

தொடர் : 2

# அடிமை வாழ்க்கை!

— மு. குலாம் முகம்மது.

அமெரிக்காவில் வாழும் கறுப்பர்களின் உரிமைகளைத்தான் அமெரிக்கர்கள் மதிக்கின்றார்கள் என்றில்லை.

உலக அரங்கில் 'கறுப்பர்களின் உரிமைகள்' என்று வந்த போதெல்லாம் அமெரிக்கா ஓர வஞ்சனையோடு நடந்துகொள்ள தவறியதே இல்லை.

தென் ஆப்பிரிக்காவில் கறுப்பர்களே அதிகமான அளவில் வாழ்கின்றார்கள்.

அது கறுப்பர்கள் பிறந்த நிலம்.

அங்கே சிறுபான்மை வெள்ளையர்களே ஆட்சி செய்து வருகின்றார்கள்.

கறுப்பு மக்களின் உரிமைகளையெல்லாம் ஒட்டுமொத்தமாகப் பிடுங்கிக் கொண்டனர் இந்த வெள்ளையர்கள்.

அங்கே நீண்ட காலமாகக் கறுப்புநிற மக்கள் உரிமை மீட்புப் போரில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள்.

இசைவுச் சீட்டுகள் இல்லாமல் உள்நாட்டுக்குள் உரிமையாக உலவிடும் உரிமை—

வயிறு பிழைக்க வேலை தேடிடும் உரிமை—

தங்கள் ஆட்சியாளர்களைத் தாங்களே தேர்ந்தெடுத்திடும் உரிமை—

இப்படித் தங்களைத் தாங்களே ஆட்சி செய்யும் உரிமை போன்ற அடிப்படை உரிமைகளைக் கோரி அந்த மக்கள் அறப் போராட்டம் முதல்கருவி போராட்டம் வரை அத்தனையும் நடத்தி வருகின்றார்கள்.

கறுப்புநிற மக்களின் இந்தப் போராட்டங்களை ஒருங் கமைத்து நடத்திவரும் பேரியக்கம் 'ஆப்பிரிக்க தேசியப் பேராயம்' 'African National Congress (ANC).

இந்த இயக்கம் தன்னுடைய போராட்டத்தின் ஒரு கால கட்டத்தில் உலக நாடுகளிடையே ஒரு கோரிக்கையை வைத்தது;

—உலக நாடுகள் அனைத்தும் தென் ஆப்பிரிக்காவில் நடை பெறும் இனவெறி அரசுக்கு எதிராகப் பொருளியல் தடையிட வேண்டும்—இதுவே அந்தக் கோரிக்கை.

இந்தக் கோரிக்கையை நிகரமை (சோஷலிச) நாடுகளும்— அணிசேரா நாடுகளும் ஏற்றுப் பொருளியல் தடைகளை இட்டன; தென் ஆப்பிரிக்க நிறவெறி அரசுக்கு எதிராக!

ஆனால் அமெரிக்கா, உதவிகளைத் தந்து தென் ஆப்பிரிக்க நிறவெறி அரசைப் பாதுகாத்தது.

அதேபோல் கறுப்பர்களின் உரிமைப் போரைத் தென் ஆப்பிரிக்க நிறவெறி அரசு தன்னுடைய முரட்டுப் படையை ஏவிவிட்டு நசுக்கியது. அப்போது தென் ஆப்பிரிக்காவுக்குக் கருவி தரக்கூடாது என்று தடை செய்யுமாறு உ. ஒ. பொது மன்றம் (1963-இல்) பரிந்துரை செய்தது. எல்லா நாடுகளும் இதை ஏற்பதாக உறுதியளித்தன.

1977-ஆம் ஆண்டு உ.ஒ. பாதுகாப்பு மன்றம் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக கட்டாயப் படைத்துறைத் தடை செய்தது.

இந்தக் கட்டாயப்படைத் தடை தென் ஆப்பிரிக்கா நிறவெறி அரசைத் தனிமைப் படுத்துவதில் மிகப்பெரிய பங்கு பெற்றது.

ஆனால் அமெரிக்கா இத்தடையைத் தொடர்ந்து ஏய்த்து வருகின்றது.

கிறித்தவத்தால் கறுப்பர்களை மதத்தோடு இணைத்துக் கொள்ள முடிந்ததே தவிர, அவர்களை மக்கள் இனத்தோடு மக்களாய் இணைத்திட முடியவில்லை.

கறுப்பர்களுக்குத் தனிக் கோயில்; அங்கே வெள்ளையர்கள் வருவதில்லை. வெள்ளையர்களுக்குத் தனிக்கோயில்; அங்கே கறுப்பர்களுக்கு இசைவில்லை.

"நீக்ரோக்கள் (கறுப்பர்கள்) தாழ்ந்தவர்கள் அவர்களுடைய அரத்தம் வெள்ளை இனத்தவர்களின் அரத்தம் போன்றதன்று; உயர்வானதன்று என்றும் எனவே இரு இனத்தவர்களின் அரத்தமும் வேறு வேறு; அவை ஒன்றாகக் கலந்திடக் கூடாது என்றும் முரட்டுத் தனமாகவும், குருட்டுத்தனமாகவும் அமெரிக்கர்களில் மிகப் பலர் இன்றும் கடைப்பிடித்து வருகின்றனர். இத்தகைய காட்டு விலங்காண்டிக் கருத்தைக் கொண்டவர்கள் அமெரிக்காவின் பல்கலைக் கழகங்களில் பேராசிரியர் என்னும் நிலையிலும், கோயில்களில் சமயக் குரவர்கள் (பாதிரிமார்கள்) என்னும் நிலையிலும் பட்டங்களைச் சுமந்து கொண்டிருப்பவர்கள் இருக்கின்றனர்."

"ஒரு சொட்டு நீக்ரோ அரத்தம் கலந்து விட்டால்போதும், தலை முடி சுருண்டு விடும்; உதடு பெருத்து விடும்; முகம் தட்டையாகி விடும்; அறிவு ஒளி அணைந்து விடும்; விலங்கின் இயல்பு மிகுந்து விடும்; நீக்ரோ தன்மை தன்னாலே வந்து விடும்" —என்று 1905-இல் தாமசு டிக்சன் என்பார் கூறினார். அவர் கிறித்தவக் கோயிலில் பூசை செய்யும் புனிதப் பணியில் ஈடுபட்டிருந்தார். இந்தப் போக்கினராக இருந்த பல்லாயிரக் கணக்கானவர்களில் இந்த டிக்சன் ஒருவர்."

— அண்ணா — 'வெள்ளை மாளிகை' பக் 87,88

அமெரிக்காவில் நிறவெறி; இந்தியாவில் இனவெறி. இதைத் தான் தீண்டாமை என்கிறார்கள். இந்த இனவெறிக் கொள்கையிலிருந்து - தீண்டாமையிலிருந்து விடுதலை தேடி இந்திய மக்கள் மேற்கொண்ட கொள்கைகளில் ஒன்று கிறித்துவம்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# நான் தொலைக்காட்சிப் பெட்டியாக இருக்க விரும்புகிறேன்!

ஆசிரியர் அன்று மாணவர்களிடம் வேடிக்கையான கட்டுரை ஒன்றை எழுதச் சொன்னார்.

தலைப்பு: ''உங்கள் வீட்டில் இருக்கும் பொருள்கள், கருவிகளில் எதுவாக மாறிட நீங்கள் விரும்புவீர்கள்? அதற்கான காரணங்கள் யாவை?''

சிறுவர் சிறுமியர் தங்களின் விருப்பத்தை எழுதினார்கள்; ஒரு சிறுவன் கீழ்வருமாறு எழுதினான்.

''அனைத்துப் பொருள்களையும் விட நான் தொலைக்காட்சிப் பெட்டியாக மாறிட விரும்புகிறேன்.

அவன் அதற்குத் தந்த காரணங்கள் இவை: ''நான் தொலைக்காட்சிப் பெட்டியாக இருந்தால் என் பெற்றோர் என்னைப் பார்த்த வண்ணம் இருப்பார்கள். என்னை அதிகம் கவனிப்பார்கள்; நான் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்பார்கள். நான் பேசும்போது மற்றவர்கள் பேசினால் அவர்கள் அமைதியாயிருக்கும்படி சொல்வார்கள். 'அறையை விட்டு வெளியே போ' என்று என்னை அதட்ட மாட்டார்கள். நான் விளையாடும்போது 'படிக்கப் போ என்று விரட்டமாட்டார்கள். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் முடியும்வரை அவர்கள் படுக்கப்போவதில்லை. என் விருப்பப்படி நான் செயல்படுவதை அவர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்கள். எனவே நான் தொலைக்காட்சிப் பெட்டியாக இருக்க விரும்புகிறேன்.'' —நன்றி. 'சமரசம்.' ஏப். 1-15,92;

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

அப்படிக் கிறித்துவத்தை ஏற்றுக் கொண்டவர்கள் எப்படி இருக்கிறார்கள்?

ஆங்கிலக் கிழமை இதழ் ஒன்று இப்படிக் குறிப்பிடுகிறது:

''திண்டுக்கல்! அதன் அருகில் பாஞ்சம்பட்டி என்னும் சிற்றூர். இங்கே தாழ்த்தப்பட்ட கிறித்துவர்களை (அஃதாவது தீண்டாமைக்கு தீர்வு தேடி மக்களோடு மக்களாக ஆகிட கிறித்துவத்தை ஏற்றுக் கொண்ட தாழ்த்தப்பட்ட குலமக்கள் அங்கே தாழ்த்தப்பட்ட கிறித்துவர்கள் என அழைக்கப்படுகின்றனர்.) தனியாகப் பிரித்துத் தொலைவில் வைத்து விடுவது என்பது புதிய செய்தி அன்று. அங்கு தீண்டத்தகாதவர்களுக்கு ஒரு தனி வீதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. உயர் சாதி கிறித்தவர்கள் எந்த நிலையிலும் இந்த வீதிகளில் நடப்பதில்லை; தாழ்த்தப்பட்ட கிறித்தவர்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட கிணறுகளிலிருந்து தான் தண்ணீர் எடுத்திட வேண்டும்.''

(தொடரும்)




(நல்ல அறிவு முதிர்ச்சியுடைய குழந்தைகளின் பேச்சு, செயல் முதலியவை மிகவும் வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும்; பெரியவர்களால் பண்ண இயலாத கற்பனைத் திறன்களும், செயல் திறன்களும் சில நேரங்களில் அவர்கள் செய்வது, மிகவும் கவனித்து ஊக்கப்படுத்தத் தக்கன.

அத்தகைய குழந்தைகளின் பேச்சுகள், செயல்கள், நடவடிக்கைகள் முதலியவற்றைக் கவனித்து இந்தப் பகுதிக்கு எழுதி அனுப்புங்கள், குழந்தைகளின் படங்களையும் அவர்களின் முழுப் பெயர், அகவை, கல்வி வகுப்பு முதலியவற்றையும் அனுப்புவது நல்லது.)

## 1. செந்தணலின் குறும்புகள் (தொடர்ச்சி)

—சித்திரச் செந்தாழை ஆறிறைவன். அறி.மு., அமெரிக்கா.

### 7. சொல்லாய்வாளன்!

'இந்தி'யர்களின் மொழி ஆளுமை இந்தியாவில் மட்டுமன்று; எங்கெங்கு மக்கள் இவ்வுலகில் வாழ்ந்து வருகின்றனரோ, அங்கங்கெல்லாம் அந்த 'இந்தி'யர்கள் இந்தி பேசாத இந்தியர்களைப் பகடி (கேலி) செய்வதும் தற்பெருமை கொள்ளுவதுமாகத்தான் உள்ளார்கள். அத்தகைய சூழலில் என்னுடன் எப்போதும் வம்பு கொள்பவள் ஒருத்தி. அவளிடம் நல்ல முறையில் பேசிக்



கொண்டிருந்தாலும் கூட, எங்கிருந்தோ ஓர் 'இந்தி' முள்ளை (சொல்லை)க் கொண்டு வந்து குத்துவாள். பெரும்பாலும் அதற்கு எதிர்க் குத்தைப் பெற்று விடுவாள்; இப்படியாக மொழிச் சிக்கலைப் பற்றிப் பேசுகையில் எந்தச் சொல்லிலிருந்து எந்தச் சொல் வந்தது என்பது பற்றி அதிகமாக உரையாடல்கள் நடக்கும், ஒரு முறை 'மாலை' என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்ட 'மாலா' என்ற சொல்லைப் பூமாலைக்குப் பயன்படுத்தினாள். எனக்கு வியப்பாக இருந்தது; உடனே, "இந்த, 'மாலா' என்னும் உங்கள் இந்திச் சொல், தமிழ்ச் சொல்லான 'மாலை' என்னும் சொல்லிலிருந்து வந்திருக்கிறது, பார்! 'மாலை' என்பது தூய தமிழ்ச் சொல்'' என்றேன்; அதற்கு அவள் அரை மனத்தோடு ஒப்புக் கொண்டாள். என்றாலும், அடிக்கடி இதுபோன்று நிறைய இந்திச் சொற்களைக் குறிப்பிட்டு விளக்கிக் கூறுவேன். இந்த உரையாடல்களை நானும் அந்த இந்தி அம்மையாரும் அறியாமலேயே என் மகன் தணலும், ஏறத்

தாழ அதே அகவையுடைய அந்த அம்மாளின் மகளும் கவனித்தும் கேட்டும் வந்ததைப் பிறகுதான் நான் உணரமுடிந்தது.

ஒருமுறை அந்த அம்மாளின் மகள், தணலுடன் உணவருந்திக் கொண்டிருந்தாள். அது கீரைச் சோறு. தணல் அச் சோற்றைக் காட்டி, இ'து என்ன என்று தெரியுமா, உனக்கு'' என்று கேட்டான்.

''ஓ, எனக்குத் தெரியுமே, இது 'கீரா' '' என்றாள். (எல்லாம் ஆங்கிலத்தில் தான் பேச்சு நடந்தது.)

''அதற்கு அவன், 'ஓ, இதை நீங்கள் இந்தியில் 'கீரா' என்று சொல்வீர்களா? அப்படியானால் அது தமிழ்ச் சொல் ஆகிய 'கீரை' யிலிருந்துதான் வந்திருக்கும். நாங்கள் இதைக் 'கீரை' என்று சொல்வோம்.'' அவன் ஆங்கிலத்தில் அடித்துச் சொல்லியது, கேட்டுக் கொண்டிருந்த என் தமிழ் மனத்தைக் குளிர்வித்தது.

## 8. இந்தக் கிறித்தோபர் நகரில் நான் மட்டும்தானா இருக்கிறேன்?

ஒரு முறை தணலும் அவன் தோழி ஒருத்தியும் விளையாடிக் கொண்டிருந்தனர். இடையில் என்ன சிக்கல் வந்ததோ தெரிய-வில்லை; தணல் அவளுடன் தொடர்ந்து விளையாடவில்லை.

அவள் ஒரு சிணுங்கி. எது ஒன்றிற்கும் சிணுங்கிக் கொண்டே அவள் அம்மாவிடம் போய்ச் சொல்லி விடுவாள். அவள் அம்மா-விற்கு இ'து ஒரு பெரிய தலைவலி. சில நேரங்களில் அவளைச் சரிப்-படுத்த இயலாமல் திணறுவாள்.

இந்த முறை, அவள் அழுகையைச் சரிப்படுத்த விரும்பி, அவளைக் கையுடன் அழைத்துக் கொண்டே வந்து,

''செந்தணல்! ஏன் நீ இவளுடன் விளையாட மாட்டேன் என்று சொல்லிவிட்டாயாம்'' என்று கேட்டிருக்கிறாள், அவள் அம்மா!

அதற்கு அவன், ''அவள் என்னுடன்தானே விளையாட வேண்டாம் என்று சொன்னேன். அவள் மற்ற யாரிடமாவது விளையாடட்டுமே! இந்தக் கிறித்தோபர் நகரில் நான் மட்டுந்-தானா இருக்கிறேன்? என்னைத் தவிர எத்தனையோ பேர் அவளிடம் விளையாடுவார்களே! அதற்கு ஏன் அவள் அழுகிறாள்?'' என்று சொல்லியிருக்கிறான்.

அதற்கு அவள் அம்மா சற்றே வியந்து, ''ஆம் தானே'' என்று பிறகு என்னிடம் சொன்னாள். இன்னமும் கூட அவன் கேட்டதை என்னிடம் சொல்லிச் சொல்லி வியப்பாள், அந்த அம்மாள்.

## 9. மருத்துவரும் சரியானவரில்லை! மருந்தும் சரியானதில்லை!

தொடர்ந்து, ஒரு முறை இருமிக் கொண்டே யிருந்தான், தணல்!

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# முறையாகச் செய்யும் உடற்பயிற்சியின் நன்மை!

தவறாது, முறையாகச் செய்து வரும் உடற்பயிற்சியால் பத்து நன்மைகள் கிடைக்கும் என்று உடல் நல மருத்துவ அறிஞர்கள் கூறுகின்றனர்.

1 உடலில் மிகுதியான கொழுப்பு சேர்வதில்லை. சேர்ந்திருக்கும் கொழுப்பும் குறையும்.

2 நெஞ்சாங்குலையைச் சீராக இயங்க வைக்கும்.

3 குருதியழுத்தத்தைக் குறைக்கும்.

4 சர்க்கரை நோயைச் சீராக வைத்திருக்கும்.

5 எலும்பை வலிவடையச் செய்யும்.

6 உடலிலுள்ள தசைநார்களையும் மூட்டுகளையும் வலிவடையச் செய்கிறது.

7 உடலின் இயக்க ஆற்றலை அதிகரிக்கச் செய்யும்.

8 உடல் முதுமை அடைவதைத் தடுத்து, இளமை யுணர்வைத் தரும்.

9 உடற் பயிற்சி கால்களிலுள்ள நார்களையும், வயிற்றில் உள்ள தசைகளையும் வலிவுறச் செய்வதால், முதுகந் தண்டில் ஏற்படும் தொல்லைகள் வராது காக்கும்.

10 உடல் நலத்தை மேம்படுத்தி வாழ்க்கை மேல் ஏற்பட்ட வெறுப்பை நீக்கி, வாழ்கிற விருப்பத்தை உண்டாக்கும். வாழ்வை இன்பமுடையதாக ஆக்கும். O

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

''தொடர்ந்து இருமினால், தொண்டை புண்ணாகிவிடும்; இருமலைக் கட்டுப்படுத்து! கட்டுப்படுத்தப் பழகிக் கொள்!'' என்றேன்.

''கட்டுப் படுத்துவது பெரியவர்களுக்குரிய ஒன்று; அது சிறியவர்களால் செய்ய முடியாதது; என்னால் அதனால் அடக்க முடியவில்லை'' என்றான்.

''அது எப்படி? நான் மருந்தும் உனக்குத் தருகிறேன்; அதற்கு மீறி இருமல் வந்தால், நாம் அதைக் கொஞ்சமேனும் தடுத்துக் கொள்ள வேண்டும்'' என்றேன்.

''அப்படியானால் நீ கொடுக்கும் மருந்து சரியாக வேலை செய்ய வில்லை'' என்றான்.

''அதெப்படி? மருத்துவர் தானே அந்த மருந்தைக் கொடுக்கச் சொன்னார்'' என்றேன்.

''அப்படியானால் மருத்துவர் சரியான மருத்துவராக இருக்க மாட்டார்; மருத்துவரும் சரியானவர் இல்லை; மருந்தும் சரியானதில்லை! எனவேதான் என் இருமல் இன்னும் அடங்கவில்லை; என்னால் மட்டும் எப்படி அடக்க முடியும்?''—என்று கேட்டான்.

'கட்டுப் படுத்து' என்று சொல்வதை நிறுத்தி விட்டேன்.

(தொடரும்)

# பொத்தகங்கள் தொடர்பானவை!

❀ பொத்தகங்கள் மட்டும் இல்லையென்றால் கடவுள் இல்லை; அறநெறி பொறுத்துக் கொள்ள முடியாததாக இருக்கும்; இயற்கை அறிவியல் குத்திட்டு அசையாமல் நின்றுவிடும்; மெய்ம்மம் முடமாகி விடும்; எழுத்துகள் ஊமையாகிவிடும்; அனைத்துமே இருண்டு விடும். —பார்த்தலோனி

❀ பொத்தகங்கள் மெய்யறிவுப் பெட்டகத்தைத் திறக்கும் திறவு கோல்கள்; இன்பப் பூங்காக்களில் புகும் நுழைவாயில்கள்; நம்மை உயர்த்துவிக்கும் வழிகள்; நம் நண்பர்கள்.
—அமிலி பௌல்சன்.

❀ சான்றோர்களுடைய நூல்களுடனேயே பழகு. சால்பின்றி வாழ் திறமை(சாமர்த்தியம்)உடையவர்களுடைய நூல்களைக் கையால் தொடக்கூடச் செய்யாதே! —மெல்வில்.

❀ பொத்தகம் ஒன்றுதான் அழிவற்ற நிலையான பொருள்.
—ஆர். கௌதே.

❀ மாந்தப் பிறவிக்கு அடுத்தாற் போல் இவ்வுலகில் வியப்பான பொருள் பொத்தகந்தான். ஏனென்றால் ஆயிரக் கணக்கான கற்களுக்கு அப்பால் உள்ளவர்களுடனும், நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்களுடனும் நாம் இன்னும் உரையாடி இன்புற உதவும் அரிய கருவி பொத்தகம்.
—கிங்சுலி.

❀ என் மனத்துக்கு உகந்த நூல்களை மட்டும் கொடுத்து என்னை என் வாழ்வு முழுவதும் சிறையிட்டாலும் நான் துன்பப்பட மாட்டேன். —மாசினி.

❀ படிப்பில் பற்று இல்லாத அரசனாயிருப்பதை விட ஏராளமான நூல்களை உடைய ஏழையாயிருப்பதையே விரும்புவேன். —மக்காலே.

❀ பல தன்மைகள் வாய்ந்த நண்பர்கள் தொடர்பை விட, பொறுக்கி எடுக்கப் பெற்ற சில பொத்தகங்களின் உறவு நமக்கு அதிக நன்மையை அளிக்கும். —கோல்டன்.

❀ ஒரு நல்ல பொத்தகம், நீ உண்ணும் வேளையிலும் கூட உனது இடது கையில் வைத்த வண்ணம் உன்னைப் படிக்கத் தூண்டும். —பென் சான்சன்.

❀ அரசர், அமைச்சர் முதலானவர்களைக் காண்பதற்கு நாம் காத்திருக்கும் நிலைபோல் இல்லாமல், நாம் எளிதில் கண்டு மகிழுமாறு நமக்காக அந்த அறிஞர் பெருமக்கள் என்றும் எங்கும் அருள் கொண்டு நூல் வடிவில் காத்திருக்கின்றனர். —இரசுகின்.

❀ பொத்தகத்தைத் தொடுபவன் மனிதனையே தொடுபவனாகின்றான்! —வால்ட் விட்மன்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# சமசுக் கிருதத்தின் சொல் வறுமை!

சமசுக் கிருத மொழி ஒரு செயற்கை மொழி! ஆரியப் பார்ப்பனர்கள் அன்றைய வடதமிழ் மொழிகளாகிய பிராகிருதம் முதலிய மொழிகளைத் தங்கள் பண்பட்டாத வேத மொழியுடன் கலந்து செய்யப் பெற்றது என்பது அனைவரும் அறிந்ததே. இது தேவ மொழி என்பது பார்ப்பனரின் பித்தலாட்டம்.

இதில் உள்ள பலவாறான குறைபாடுகளில் சொல் வறுமை என்பதுவும் ஒன்று. அஃதாவது ஒரே சொல் பல பொருள்களைக் குறிக்கப் பயன்படுவது தமிழிலும் அவ்வாறான ஒரு சில சொற்கள் உண்டு. ஆனால் அவை சிறப்பு நோக்கியே அவ்வாறு வழங்கும்.

ஆனால் சமசுக் கிருதத்தில் அவ்வாறன்று. வேறு தனிச் சொல் இல்லாமைப் பொருட்டு ஒரே சொல் பல பொருளைக் குறிப்பது அதன் சொல் வறுமையையே காட்டும்.

எடுத்துக் காட்டாக, சமசுக் கிருதத்தில் மிருகம் என்னும் ஒரு சொல், விலங்கு என்னும் பொதுப் பொருளைக் குறித்தாலும் வேறு வேறு பயன்படுத்தங்களில் வேறு வேறு பொருளைக் குறித்தலைக் காணலாம்:

| | | |
|---|---|---|
| மிருக சுபிடகம் | — | வெருகுப் பூனை |
| மிருக சண்டாளம் | — | (விலங்கில் தாழ்ந்த) கழுதை |
| மிருக சாலிகை | — | மான் வலை |
| ,, சீருட்டம் | — | மான் தலை |
| ,, ஜீவனன் | — | விலங்கை வேட்டையாடிப் பிழைப்பவன் |
| ,, தஞ்சகன் | — | (தஞ்சம் புகும் விலங்கு) நாய் |
| ,, நரன் | — | திங்கள், நிலவு (முயல் விலங்குபோல் உள்ள நிழலைப் பெற்றிருப்பது) |
| ,, பத்திரி | — | ஒரு மூலிகை—வறட்சுண்டி |
| ,, பதி | — | அரிமா (விலங்குத் தலைவன்) |
| ,, மாதிருகா | — | பெண் மான் (பெண் விலங்கு) |
| ,, ஆண்டி | — | விலங்காண்டி, (காட்டுமாந்தன்). |
| ,, ஆதி | — | புலி |

(அடிப்படை : அருளியின் 'அயற்சொல் அகராதி')

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

❖ தன் மகள் படிக்கக் கூடாதது என்று கருதும் எந்த ஒரு சொல்லையும் ஓர் ஆசிரியன் எழுதக் கூடாது. -ரசல் லோவெல்.

❖ வேறொரு பொத்தகத்தில் இருப்பது போலில்லாமல், புத்தம் புதியதாக ஒரு சொற் கோவை, சொல்லாட்சி, ஒரு பக்கம், எதையேனும் நாம் எழுதி விட்டோம் என்று நம்மில் யாரேனும் பெருமைப்பட முடியுமா? —மாபசான்.

நூலாசிரியர்கள் உயிரோடிருக்கும் பொழுது அவர்களை ஏளனம் செய்து கண்டிப்பார்கள். இறந்த பிறகு புகழ்வார்கள். —வால்டேர்.

# கலைக்கண்ணோடு பார்க்கவேண்டும்!

எம். இராதாகிருட்டிணன்.

கவர்ச்சி நடனம் ஆடித் தமிழக மக்களையே தலை குனிய வைத்துக் கொண்டிருக்கும் ஒரு நடிகையை செய்தியாளர் ஒருவர் நேருரை கண்டார். ''இப்படித் திரைப்படங்களில் அருவருப்பாக நடிக்கிறீர்களே...இதனால் மக்கள் கெட மாட்டார்களா''? எனச் செய்தியாளர் கேட்டார்.

''எதையும் நீங்கள் கலைக் கண்ணோட்டத்தோடு பார்க்கணும் 'சார்'...கவர்ச்சி வேறு...அருவருப்பு (ஆபாசம்) வேறு'' என்ற முறையில் நடிகை விடை அளித்தார்.

அஃதாவது அந்த நடிகை எப்படி வேண்டுமானாலும் ஆடுவாராம். பார்க்கும் நாம்தாம் 'கலைக் கண்ணோட்டத்தோடு' பார்க்க வேண்டுமாம். என்ன அறிவற்ற விடை!

ஒரு படத்தின் இயக்குநரிடம் ''உங்கள் படத்தில் அருவருப்பு அதிகமாக உள்ளதே'' எனக் கேட்கப்பட்டது. அதற்கு அவர், ''மக்கள் விரும்புகிறார்களே...எதை அவர்கள் விரும்புகிறார்களோ அதைத் தருவதுதான் ஓர் இயக்குநரின் கடமை'' என விடை அளித்தார். மக்கள் விரும்புகிறார்களாம்...ஆகவேதான் இப்படி அருவருப்பாகப் படமெடுக்கிறாராம். இந்த இயக்குநரின் மனைவியோ தங்கையோ அருவருப்பாக நடிக்க வேண்டும் என மக்கள் விரும்புகிறார்கள் எனக் கொள்வோம். மக்கள் விரும்புகிறார்கள் என்பதற்காக இவ்வாறு தங்கள் குடும்ப உறுப்பினர்கள் அருவருப்பாக நடிப்பதைப் படமெடுக்க இயக்குநர் சம்மதிப்பாரா?

இன்னொரு நடிகையிடம் ''படங்களில் அருவருப்பாக நடனம் ஆடுகிறீர்களே...இது போல அருவருப்பான படங்களைப் பார்ப்பீர்களா?'' என ஒரு செய்தியாளர் கேட்டார். அதற்கு அந்த நடிகை, ''எங்கள் அம்மா அதுமாதிரிப் படங்களைப் பார்க்க அனுமதி தரமாட்டார்கள்'' எனக் கூறினார். அ'தாவது ஓர் அருவருப்பு நடிகை கூட பார்க்க முடியாத அளவுக்கு அந்தப் படங்களின் 'தரம்' அமைந்திருக்கிறது.

இப்படி அருவருப்பு மூலம் இளைய தலைமுறையினரைத் திரைப் பட உலகினர் கெடுத்து வருகின்றனர். மேலை நாட்டினரே வெட்கப்படும் அளவிற்கு அருவருப்பு திரையுலகினரால் பரப்பப்பட்டு வருகிறது. அருவருப்புச் சுவரொட்டிகள் நகரெங்கும் ஒட்டப்படுகிறது. இதைப் பார்க்கும் மாணவ குமுகாயம் கெடுகிறது.

திரைப்பட உலகத்தினர் எவ்வளவோ நல்ல செய்திகள் இருந்தாலும் அவற்றைப் படமெடுப்பதில்லை. இவர்களுக்குத் தெரிந்தது எல்லாம் காதல்—அருவருப்பு இரண்டு மட்டும்தாம். LKG படிக்கும் பிள்ளைகளுக்கு இடையில் ஏற்படும் ''காதல்'' பற்றிப் படமெடுக்காதது ஒன்றுதான் குறைச்சல்!

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# நூல் நிலையம்!

○ தீப்சு நகரில் ஒரு நூல் நிலையத்தின் முன் பக்கத்தில் உள்ள வாசகம் இது: ''உள்ளத்திற்கு மருந்து''
—சிகியூலசு.

○ எந்த வீட்டில் நூலகம் உள்ளதோ அந்த வீட்டில் 'உள்ளம்' இருக்கிறது.
—பிளேட்டோ.

○ நூல் நிலையம் என்பது, மக்கள் வாழ்வில் ஓர் ஆடம்பரம் அன்று; மிகத் தேவையானது.
—பிச்சர்.

○ உங்களுக்கென்று ஒரு வீட்டைக் கட்டும்பொழுது எப்படி கழிவறை, குளியலறை, சமையலறை, சாப்பாட்டறை, படுக்கையறை, வரவேற்பறை என்று அமைக்கின்றீர்களோ, அப்படியே ஒரு நூலக அறையையும் அமைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுதுதான் அந்த வீடு உயிர்மலர்ச்சி உடையதாக இருக்கும்.
—பெருஞ்சித்திரனார்.

○ நூலகம் என்பது பெரியோர்கள் இணைந்து வாழும் ஒரு புண்ணிய இடம்; அங்கே எப்பொழுதும் அறிவு மணம் கமழ்ந்து கொண்டிருக்கும்.
—லாய்ப்.

○ நூல் நிலையமே இக்காலத்தில் உண்மையான பல்கலைக்கழகம்.
—கார்லைல்.

○ நூல் நிலையம் இல்லாத வீடு உயிரில்லாத உடம்பு போன்றது. எனவே வீட்டிற்கு ஒரு நூல் நிலையம் தேவை. வீட்டில் உள்ளவர்கள் ஓய்வு நேரங்களில் நூல்களைப் படித்து அறிவைப் பெருக்க வேண்டும். தொழில் செய்து ஓய்ந்திருக்கும் பொழுது அவர்களது உள்ளத்திற்குக் கிளர்ச்சி தரக் கூடியவை நூல்களே!
—தாமசு ஆல்வா எடிசன்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

இப்படி அருவருப்பு மூலம் படம் எடுத்து மக்களைக் கெடுக்கும் திரைப்பட உலகைப் பற்றி அரசியல்காரர்கள் கவலைப்படுவதில்லை. எவன் ஒருவன் மக்களைப்பற்றிக் கவலைப்படுவதில்லையோ அவனே சிறந்த அரசியல்காரனாக மிளிர்கிறான். ஆகவேதான் நம் அரசியல்காரர்கள் மக்கள் சிக்கல்களைப் பற்றிக் கவலைப் படுவதில்லை.

மாதர்கழகங்கள் பல இருந்தும் அருவருப்பைப் பற்றிப் பேசுவதில்லை. நளினியின் புடவை பற்றியும், கோமளாவின் கணவன் எப்படியென்றும், அப்பளம், ஊறுகாய் போடுவது எப்படியென்றும் பேசியே பொழுதைக் கழிக்கின்றனர்.

மாணவ மாணவியர்களே!...எழுங்கள்... அருவருப்பை ஒழிக்கப் புறப்படுவோம்...எத்தனை இடர்கள் வந்தாலும் தகர்த்தெறிவோம். இப்படியே பேசாமல் விட்டால் பின்னால் நம் இளம் மரபினர் அரசியல்காரர்களைப்போல எதைப் பற்றியும் கவலைப் படாமல் இருப்பார்கள். இந்த நிலை தொடரலாமா? அருவருப்பையும் அருவருப்பு உணர்வைத் தூண்டுவோரையும் ஒழிப்போம். ○

—நன்றி. 'சமரசம்' ஏப்: 16-30,92

# வான ஊர்தியில்!

வானவூர்தியில் அமெரிக்காவில் இருந்து சப்பான் வழியாக இந்தியா திரும்பிக் கொண்டிருந்தேன். லாஸ் ஏஞ்செல்ஸ் நகரிலிருந்து டோக்கியோ போய்ச் சேர 10 மணி நேரம் பறக்க வேண்டும்.

அட்லாண்டிக் பெருங்கடல்மீது வானூர்தி பறந்து கொண்டிருந்தது. அது மிக ஆழமான கடல். இமயமலையைத் தூக்கி அதில் போட்டால் அந்தக் கடலின் ஒரு மூலைக்குக்கூட அது காணாது. இத்தகைய மாபெரும் கடலைக் கடந்து செல்லும் ஆற்றலை மாந்தன் பெற்றுள்ளான் எனில் அ'து இறைவனின் மிகப்பெரும் அருளாண்மையே ஆகும்.

''இப்பொழுது நாம் 33.000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருக்கிறோம்'' என்று வானூர்தியில் அறிவிக்கப்பட்டது. நான் வானூர்தி அதிகாரியிடம், ,'இவ்வளவு உயரம் பறக்க வேண்டிய காரணம் என்ன? 2000 அடி உயரத்திலும் பறக்கலாமே?'' என்று கேட்டேன்.

அதற்கு அவர், ''கீழே காற்றின் அழுத்தம் அதிகம்; எரிபொருளும் அதிகம் செலவாகும். ஆனால் மேலே செல்லச் செல்ல காற்றின் அழுத்தம் குறையும். இந்த உயரத்தில் பறக்கும்போது எரிபொருள் பாதிக்குமேல் மிச்சப்படுகிறது'' என்றார்.

வானூர்தி மிக உயரத்தில் பறப்பது ஏதமான (ஆபத்தான) செய்தியாகும். மாந்தனுக்குள் குருதி ஓட்டம் சீராக இயங்குவதற்குப் பொருத்தமான காற்றழுத்தம் தேவைப்படுகிறது. இந்த அழுத்தம் நிலத்தின் மீதுதான் கிடைக்கிறது. விண்வெளியில் மேலே சென்றவுடன் காற்றின் அழுத்தம் குறைகிறது. குறைந்த காற்றழுத்தத்தில் மாந்தனை வெளியே விட்டால் அவனுடைய கண், காது, மூக்கு வழியே—ஏன், தோலின் வழியே கூட—குருதி வெளிவரத் தொடங்கும். அவன் துடி துடித்துச் செத்துவிடுவான்.

இந்த ஏதத்தைத் தவிர்ப்பதற்காக 'அழுத்தச்செப்பனீடு' என்ற முறை 1940-இல் கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு முன்பு வானூர்திகளால் அதிக உயரம் பறக்க முடியாது. ஆனால் அந்தக் கண்டுபிடிப்புக்குப் பின் வானூர்தி மிக உயரத்திலும் பறக்க முடிகிறது; எரிபொருள் செலவும் குறைகிறது.

—மௌலானா வகீதுத்தீன் கான். நன்றி, சமரசம். ஏப்: 16-30,'92

---

ஃ வண்ணப் புகைப் படங்கள் எடுப்பது 1935-ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப் பட்டது.

ஃ முருங்கைக் கீரையைத் தொடர்ந்து நெய்யுடன் கலந்து பொரித்து உண்டு வந்தால், கண் பார்வைக் குறைவு நீங்கும். எலும்புகள் வலுப்பெறும்; மலட்டுத் தன்மை நீங்கும்; நரம்புத் தளர்ச்சி நீங்கி நரம்புகள் வலுப்பெறும்.

அழைக்கப் பெறும் ரங்கராசன் என்பவர். இந்த இந்தி-மொழித் தொடரை இயக்குநர் கே. சங்கர் இயக்குவார்.

- கிறித்துவர்கள், முசுலீம்கள் தவிர்த்து இந்தியாவில் உள்ள மக்கள் அனைவருமே 'இந்து' மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று இந்துச் சட்டம் (Hindu Law) கூறுகிறது. அதே போல், பார்ப்பனர் தவிர வேறு எவரும் கோயில் கருவறைக்குள் (கர்ப்ப கிரகத்திற்குள்) செல்லக் கூடாது என்று உச்ச நெறி மன்றம் (சுப்ரீம் கோர்ட்) தீர்ப்புக் கூறியுள்ளது.
- உலகில் ஏறத்தாழ 380 கோடியாண்டுகளுக்கு முன்னர் உயிரினம் தோன்றியது. அப்போதிருந்த கதிரவனை விட இப்பொழுதுள்ள கதிரவன் 25 முதல் 30 விழுக்காடு வரை அதிகமான வெப்பத்தையும் வெளிச்சத்தையும் தருவதாக அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.
- ஒரு வீடு கட்ட ஆகும் செலவில் 15 விழுக்காட்டு அளவை அதில் உள்ள மரப்பொருளுக்கு ஒதுக்க வேண்டும்.
- நோய்களை எதிர்க்கும் ஆற்றல், உயிர்ச்சாரம் (வைட்டமின்) 'E'—ஆல் கிடைக்கிறது. இது கீரைகள், பருப்பு வகைகள், கொட்டை வகைகளில் கிடைக்கிறது.
- குமுகாயக் கட்டுப்பாடுகளையும், பொது ஒழுக்கங்களையும் தகர்த்துப் பெண்களுடன் இளைஞர்களும், நடுத்தர ஆண்களும் தொட்டுப் பழகவும் விளையாடவும் வாய்ப்பளித்துத் தங்கள் பாலியல் உணர்வுகளுக்கு வடிகாலாக அமைவதால், இந்தியாவில் 'ஹோலிப்' பண்டிகை மிக வேகமாகப் பரவி வருகிறது என்று குமுகாய நல அறிஞர்கள் கருதுகிறார்கள்.
- கர்நாடக மாநிலத்தில் மலை நாடு மலைப் பகுதியில் உள்ள சந்திரகுடி இரேணுகாம்பாள் கோயிலில் ஆண்டுதோறும் பெண்கள் அம்மண பூசை செய்கிறார்கள். கர்நாடக அரசு எவ்வளவோ முயன்றும் இதைத் தடுக்க முடியவில்லையாம். எனவே இந்தப் பூசை நடக்கும் பொழுது ஆண்கள் யாரும் அக் கோயிலுக்கு வராதபடி காவலர்களை விட்டுத் தடுத்து வருகிறது அரசு.
- திரைப்பட முன்னணி நடிகர் ரஜினிகாந்த் கன்னடத் தாய்-மொழியினர் என்று எல்லாரும் கருதிக் கொண்டிருக்கின்றனர். உண்மையில் அவர் ஒரு மராட்டியர். கருநாடகத்தில் அவர் பணியாற்றினார். அவர் மனைவி ஒரு பார்ப்பனப் பெண்.
- உலகில் இப்பொழுதுள்ள ஊர்திகள் (இயங்கிகள், பேருந்துகள், சரக்குந்துகள், இரு சக்கர ஊர்திகள் முதலிய கன்னெய்யில் (பெட்ரோலில் ஓடுபவை) ஏறத்தாழ 50 கோடியாகும். இவற்றுள் இந்தியாவில் மட்டும் 1.5 கோடி ஊர்திகள் சாலைகளில் ஓடுகின்றன.
- இந்தியாவில் உள்ள பார்ப்பனர்களிலேயே உயர்ந்த வகைப் பார்ப்பனராகக் கருதப் பெறுபவர்கள் மராட்டிய மாநிலத்தில் உள்ள சித்பவன் பார்ப்பனர்கள்தாம் என்று கூறப் பெறுகிறது. திலகர் அந்த வகைப் பார்ப்பனர். அவர் இந்திய அரசியல் தலைமை பார்ப்பனர்க்கே இருக்க வேண்டும் என்ற கொள்கை உடையவர்.
- இந்தியாவின் நிலப்பரப்பு, உலகின் மொத்த பரப்பளவில் நாற்பதில் ஒரு பங்கு ஆகும்.
- உலகில் உள்ள மொத்த எருமைகளில் 50 விழுக்காடும், மாடுகளில் 15 விழுக்காடும், ஆடுகளில் 4 விழுக்காடும் இந்தியாவில் உள்ளன.

# நாம் வானவெளியில் ஓடிக் கொண்டே இருக்கிறோம் !

உலகின் நில நடுக்கோட்டுப் பகுதிக்கு அருகே வாழும் நாம், உலக உருண்டையின் சுழற்சியினால் நம்மையறியாமலேயே வானவெளியில் நொடிக்கு ஏறத்தாழ அரை அ.மா.(கி.மீ) (ஒரு மணிக்கு 1200 கற்கள்) இடம் பெயர்ந்து கொண்டே இருக்கின்றோம்; இது நம்முடைய முதலாவது இடப் பெயர்ச்சி.

அடுத்து, நாம் உலக உருண்டையின் தற்சுழற்சியோடு சேர்ந்து நகரும் அதே பொழுதில், நம் உலகம் கதிரவனை நொடிக்கு ஏறத்தாழ 30 அ.மா. (கி.மீ.) (ஒரு மணிக்கு 67,500 கற்கள்) இடம் பெயர்கின்றோம்: இது நம்முடைய இரண்டாவது இடப் பெயர்ச்சி.

இனி, இதனையும் அடுத்து, நம்மையும் நம் உலகத்தையும், நம் மண்டிலத்தில் உள்ள செவ்வாய், அறிவன்(புதன்), வியாழன், வெள்ளி, காரி(சனி), புளூட்டோ, நெப்டியூன், யுரேனசு ஆகிய கோள்களையும் சேர்த்து இழுத்துக் கொண்டே நம் மண்டிலத்துத் தலைவனாகிய சூரியன் என்னும் விண்மீன், நொடிக்கு 250 அ.மா. (கி.மீ.) (மணிக்கு 5,72,500—ஐந்து இலக்கத்து எழுபத்திரண்டாயிரத்து ஐநூறு கற்கள்) வேகத்தில் சிக்னசு (Cygnus) என்னும் விண்மீனை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது: அத்துடன் நாமும் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருக்கிறோம். இது நம்முடைய மூன்றாவது இடப் பெயர்ச்சி.

இனி, இவற்றையும் அடுத்து, நம் கதிரவன் மண்டிலமும், அது நோக்கிச் செல்லும் சிக்னசு என்னும் விண்மீனும் போலப் பலகோடி விண்மீன்களும் இருந்து இயங்கிக் கொண்டுள்ள நம்முடைய அண்டமாகிய பால்வழி (Milky way) என்னும் புடவி (Universe) ஆகிய உடுக்கள் மண்டிலமோ, இதனினும் மிக மிகப் பெரிதான வெர்கோ விண்மீன்கள் மிகைக் கொத்து (Virgo Super Cluster) என்னும் பேரண்டத்தை நோக்கி நொடிக்கு 700 அ.மா. (கி.மீ.) (மணிக்கு 15,75,000 பதினைந்து இலக்கத்து, எழுபத்தையாயிரம் கற்கள்) வேகத்தில் சீறிப் பாய்ந்து நமக்கு அண்டையிலுள்ள ஹைடிரா செண்டாரஸ் (Hydra—Centaurus), பெர்சியஸ் (Perseus), பாவா—இண்டஸ் (Pava—Indus) ஆகிய பல விண்மீன் திரள் மண்டிலங்களும், நம் கதிரவ விண்மீன் மண்டிலத்தினை தெற்கு முகமாக கீழ் இழுத்து வருகின்றன. இது நம் நான்காவது இடப் பெயர்ச்சி!

இதற்கு மேலும் ஏதோ ஒரு வகையில் இடப் பெயர்ச்சி இருக்கிறதா என்பதை எதிர்காலத்தில் வானவியலறிஞர்கள்தாம் கண்டுபிடித்துச் சொல்லுதல் வேண்டும்.

ஆக, நாம் ஒவ்வொருவரும், இந்த வானவெளியில், நாம் மேலே கண்ட நான்கு இயக்கங்களின் படி மணிக்கு (1200 + 67,500 + 5,72,500 + 15,75,000 = 22,16,500 — இருபத்திரண்டு இலக்கத்துப் பதினாயிரத்து ஐநூறு கற்கள் இந்த வானவெளியில் ஓடிக் கொண்டேயிருக்கின்றோம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்: ○

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)